# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி


உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம்ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து உமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.


கனவு 10 கற்பனை 5 ] திருச்சி 15—5—67 [ தனிப் பிரதி 25 காசு



CONNEMARA PUBLIC LIBRARY 10 MAY 1967 MADRAS


# ஸ்ரீ உ. வே. சா. நினைவுவிழாக் கவியரங்கம்

( சக்தி சரணன் )

1. இந்திரன் செல்வம் முற்றிலும் திரண்டே
ஏரலைப் பாற்கடல் முழுக
மந்தர மலையால் கடைந்தவை மீட்டு
வழங்கினன் மாலென மொழிவர் ;
செந்தமிழ்ச் செல்வம் காலமாக் கடலின்
திரைகளுள் முழுகிய போதில்
யந்திரம் போலே உழைத்தவை மீட்டே
எங்களுக் களித்தனை மேலோய் !

2. வேதமும் கலையும் செந்தமிழ்க் களித்த
வித்தகர் பாசுரம் மறைய
நாதமா முனிவன் நாற்றிசை தனிலும்
நடந்தவை தொகுத்தனன் என்பர்.
ஓதுதற் கினிய சங்கநன் நூல்கள்
உலகிடை மறைவுறு நாளில்
பாததா மரைகள் நொந்திட நடந்து
பயனுறத் தொகுத்தனை பெரியோய்.

3. தில்லையில் கோயில் காப்பறைக்குள்ளே
திகைப்பிலா நாறையூர் நம்பி
செல்லரித் திட்ட ஏடெலாம் படித்துத்
திருமுறை திரட்டினன் என்பர்.
எல்லையில் லாத ஏடெலாம் திரட்டி
எவை எவை என்றுணர் இல்லா
அல்லலினிடையே அயர்விலா துழைத்தே
அவைதொகுத் தளித்தனை ஐயா !

4. நலம்பல இழந்து திசையெலா மிகழ
நாள்தொறும் நாள்தொறும் சுருங்கிப்
புலம்புறு கின்ற தமிழக மக்கள்
பதமிடுக் குற்றிடச் செய்தாய்.
நிலத்தினில் மீண்டும் நிமிர்வுற நோக்கும்
நெஞ்சுரம் பிறந்திடு வண்ணம்
சிலம்பினை மணிமே கலையினை சிந்தா
மணியினை சிறப்புடனளித்தாய்

5. எண்ணிலாக் கதைகள் எமக்குநீ இயம்பி
இயற்றமிழ் வளர்ந்திடச் செய்தாய்.
பண்ணிறை பாடல் நூல்களைப் பதித்துப்
பைந்தமிழ் இசைவளர்த் திட்டாய்
கண்ணுறும் பண்டை நாடகமெல்லாம்
காலன்வாய் நின்றும்நீ மீட்டாய்
மண்ணுல கேத்த முத்தமிழ் செல்வி
வளர்வுற ரற்றுணை யானாய்.

6. திருநெறிச் சைவம் சிறப்புறு வண்ணம்
சிற்சில நூல்களும் பதித்தாய்.
குருவினற் சரிதை பக்தியோடியற்றிக்
குவலயம் போற்றிடக் கொடுத்தாய்
ஒருபயன் தானும் கருதிடா வான்போல்
உன்னறி வுலகினுக் களித்தாய்
இருகரம் கூப்பி வழிபடலன்றி
எதனையாம் செய்திட வல்லோம்.

7. இறப்பிலாப் பரிமேல் அழகனோ அன்றி
நச்சினார்க் கினியனோ என்றும்
சிறப்புறுகின்ற அடியார்க்கு நல்லா
னோவெனத் தெளிந்திலோ முன்னை
வெறுப்பிலா வண்ணம் நூல்களைக் கற்க
வேண்டிய இடங்களி லெல்லாம்
குறிப்புரை தந்த குருமணீ ! நெஞ்சுள்
கொண்டுனைப் போற்றிடு கின்றோம்.

8. ஊமையர் செவிடர் குருடரென் றெம்மை
உலகெலாம் பழித்திடும் போதில்
சேமமே புரிய அகத்தியன் ஒப்ப
செகத்தினில் அவதரித் திட்டாய்.
பூமிமேல் எமக்குப் புதியவாழ் வளித்த
புண்ணியா ! செந்தமிழ்ப் புலவா !
சாமிநா தையா ! என்றென்றும் உன்னல்
தாமரைத் தாள்களே சரணம்.

# திரு. கே. ஆர். கலியாணராம ஐயர் மணி விழா

★

"கவிகளையும், தேச பக்தர்களையும், தியாகிகளையும், வீரர்களையும் போற்றிப் பாராட்டினால் தான் நாட்டிலே கவிஞர்களும், தேசபக்தர்களும், தியாகிகளும், வீரர்களும் மீண்டும், மீண்டும் தோன்றுவார்கள்" என்பது பாரதியின் வாக்கு.

தமிழகத்துப் பழம்பெரும் தேச பக்தர்களில் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த இராணிப் பேட்டை, திரு. கே. ஆர். கலியாண ராமஐயர் அவர்கள் சிறந்த தேச பக்தர்.

ஐயர் அவர்கள் சிறந்த வைதிகர். காந்தி பக்தர். சமூகத் தொண்டர். சீர்திருத்தச் செம்மல். தியாகச் சீலர். எழுத்தாளர், பேச்சாளர், செயற்கரிய செய்து வரும் நற்செயலாளர், தொழிலாளர் தோழர், ஹரிஜனங்களின் அரும் நண்பர், வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பாளர். முறையாக 12 ஆண்டுகள் காஞ்சிபுரத்திலும், திருக்கழுக்குன்றத்திலும் வேதம், சாஸ்திரம் பயின்ற சிறந்த வைதீகர். பயிற்சி பெற்ற ஆசிரியர். பண்பட்ட காந்தீய நிர்மாண ஊழியர்.

1926-ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்து 1942 ஆகஸ்டு போராட்டம் முடிய எல்லாப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல ஆண்டுகள் சிறை வாசம் செய்தவர்.

1933-ஆம் ஆண்டு முதல் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் தீவிர பற்றுகொண்டு தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத்தின் வட ஆற்காடு கிளைச் செயலாளராகவும், தலைவராகவும் இருந்து கொண்டு இன்றும் சிறப்பான முறையில் சேவை செய்து வருகிறார். ஐயர் அவர்களின் ஹரிஜனத் தொண்டினைப் பாராட்டித் தமிழக அரசினர் தங்கப் பதக்கமும், வெள்ளித் தட்டும் பரிசளித்துக் கௌரவித்தனர்.

கதர், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, வகுப்பு ஒற்றுமை, தொழிலாளர் முன்னேற்றம் ஆகிய காந்தீய நிர்மாணப் பணிகளில் ஆழ்ந்த பற்றுடையவர். மதுவிலக்குப் பிரசாரத்துக்காக ஐயர் எழுதிய 'மதுபானம் ஒழிக' என்ற தினமணி வெளியீடு தமிழகமெங்கும் பரவியது.

ஜில்லா மாவட்டக் கழக உறுப்பினராகவும், மாவட்ட காங்கிரஸ் ஸ்தாபனத்தின் செயலாளராகவும்,



திரு கே. ஆர். கலியாணராம ஐயர்

தீனபந்து ஆசிரம நிர்வாகியாகவும் 40 ஆண்டுகளுக்கும் மேலாலாகத் தொடர்ந்து பணியாற்றி காந்தீய ஆக்கப் பணிக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் ஐயர் அவர்கள்.

1942 ஆகஸ்டு இயக்கத்தின் போது காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ K. காமராஜ் அவர்கள் பம்பாயிலிருந்து நேராக இராணிப்பேட்டைக்கு வந்து ஸ்ரீ K. R. கலியாணராம அய்யருடன் தலைமறைவாகத் தமிழகத்தில் சுற்றி ஆகஸ்டு இயக்கத்தைப் பரப்பியது சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள சிறப்பான நிகழ்ச்சியாகும்.

தொழிலாளர் இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டு தொழிலாளர் தலைவர்களான ஸ்ரீமான்கள் B. சிவராவ், திரு வி. க., P. R. K. சர்மா, R. வெங்கடராமன் ஆகியவர்களுடன் இராணிப்பேட்டைப் பாரி கம்பெனி தொழிலாளர் சங்க நிர்வாகியாய் இருந்து உழைத்து வளர்த்தவர் அய்யர் அவர்கள்.

எட்டயபுரத்தில் பாரதி மண்டபம் கட்டவும், பாரதிப்பாடல்களைப் பரப்பவும் அய்யர் செய்த சேவையைப் பாராட்டி பாரதி சங்கத்தார் கேடயம் வழங்கி கௌரவித்தனர்.

1952-ல் பஞ்சம் ஏற்பட்டபோது அய்யர் அவர்கள் கிராமம் கிராமமாக நடந்தே சென்று பஞ்ச நிவாரண பணிகளைச் செய்தது நாடறிந்த நற்பணியாகும். அய்யர் அவர்களின் ஒப்பற்ற பணிகளை "கல்கி" பாராட்டி ஒத்துழைத்து உதவினர்.

ஸ்ரீ K. R. கலியாணராமன் அவர்களின் மணி விழாவை மிகச் சிறப்பான முறையில் நடத்தவும், அவரது ஒப்பற்ற தொண்டினைப் பாராட்டவும் அவர் செய்துவரும் நற்பணிகளுக்காக நிதி வசூலிக்கவும், மணி விழாக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஐயர் அவர்களது தரும பத்தினியார் ஸ்ரீமதி கனகவல்லி அம்மையார் சென்ற டிசம்பர் ஐந்தாம் நாள் மறைந்துவிட்டார்கள். அதோடு அன்னாரது ஆத்ம நண்பரான பழம்பெரும் தேச பக்தர் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரி அவர்களும் மறைந்துவிட்டார். இப்பெரு இரு நிகழ்ச்சிகள் ஐயர் அவர்களுக்குப் பெரும் நஷ்டமாகும்.

மணிவிழா மே 5-ம் தேதி மாலை தீனபந்து ஆசிரமத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆர் கிருஷ்ணசாமி நாயுடு தலைமை வகித்தார்.

மணிவிழாக் குழுத்தலைவர் பித்துக்குளி முருகதாஸ் வரவேற்றார்.

மணிவிழாக் குழுவின் செயலாளரும் ராணிப்பேட்டை நகரசபைத் தலைவருமான ஏ. சம்பத்நரசிம்மன் மணிவிழாக் குழுவின் சார்பில் அறிக்கை வாசித்தார். அறிக்கையில் மணிவிழாக் குழு ஓராண்டு காலம் பணியாற்றும் என்றும், குறைந்தது ரூபாய் அறுபத்தோரு ஆயிரம் வசூலித்து, அந்த நிதியைக் கொண்டு ஆசிரமத்தில் பள்ளிக்

7-ஆம் பக்கம் பார்க்க

எழுத்தாளன்

கனவு 10] பிலவங்க, வைகாசி 15-5-67 [கற்பனை 5

# பாரதத்தின் புகழ்

சிந்தித்து வாழும் மனித குலம், பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம், தங்கள் தேவைகளை உலகறிய எடுத்தியம்பும் சுதந்திரம் போன்ற பலவித சுதந்திரங்களையும் பாரத மக்கள் காங்கிரஸ் ஆட்சியால் பெற்றுள்ளனர். ஆட்சியை மாற்றியமைக்கும் வாக்குரிமைச் சுதந்திரத்தையும் காங்கிரஸ் ஆட்சி தான் மக்களுக்கு வழங்கியிருக்கின்றது. இவைகள் அனைத்தும் ஒருங்கே பெற்ற மக்கள் ஓரளவு அரசியல் விழிப்புணர்ச்சியும் பெற்று முன்னேற்றமும் அடைந்தே தான் வந்திருக்கின்றனர்.

பலவித சலுகைகள் காங்கிரஸ் ஆட்சியால் பெற்று மறுமலர்ச்சியோடு வளர்ந்து வரும் பாரத மக்களில் ஒரு பகுதியினர், இருபது ஆண்டு காலமாக பாரத நாட்டின் எல்லா மாநிலங்களிலும் ஆட்சியைத் திறம்பட நடத்தி வந்த காங்கிரஸ் ஆட்சியை மாற்ற எண்ணங்களை கொண்டு, எதிர்க் கட்சிகளுக்கு உதவிசெய்து, பல மாநில ஆட்சியை மாற்றி வெற்றி கண்டுள்ளனர். எப்படியோ ஒரு வகையில் வெற்றி கண்டு சில மாநிலங்களில் ஆட்சி செலுத்தும் எதிர்க் கட்சியினர் பாரத நாட்டின் மத்திய ஆட்சியையும் காங்கிரஸின் பிடியிலிருந்து விடுவித்து கூட்டாட்சி ஏற்படுத்த கடந்த இரு மாதங்களாக திட்டமிட்டார்கள். அதற்காக காங்கிரஸின் சார்பாக ஜனாதிபதி, உப ஜனாதிபதி பதவிகளுக்கு நிறுத்தப்பட்டிருந்த திருவாளர்கள் ஜாகீர் உசேன், வி. வி. கிரி இவர்களைத் தோற்கடிக்க முழு மூச்சாக வேலை செய்த எதிர்க் கட்சிகளின் அநாகரிகப் போக்கைப் பற்றி பாரத மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர்.

கட்டுப்பாடு, கண்ணியம், கடமை, கொள்கையேதுமின்றி, பதவி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பல மாநிலங்களில் ஆட்சி புரியும் எதிர்க் கட்சிகளின் விபரீதச் செயல்களிருந்து பாரத நாடு காக்கப்பட்டு மத்திய ஆட்சியில் காங்கிரஸ் ஆட்சி நிலைத்து நிற்க வேண்டுமே என்ற தாபத்தில் கடந்த ஒரு மாத காலமாக தவித்த பாரத மக்கள் கோடானுகோடி என்பதில் சந்தேகமில்லை. மக்களின் தாபத்தை உணர்ந்த காங்கிரஸ் ஆட்சியிலுள்ள சட்ட மன்ற பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களும் பிற மாநிலங்களிலுள்ள காங்கிரஸ் உறுப்பினர்களும், ஏனைய விவேகமுள்ள உறுப்பினர்களும் கட்டுப்பாடாக தங்கள் வாக்குகளை திரு. ஜாகிர் உசேன் அவர்களுக்கும், வி. வி. கிரி அவர்களுக்கும் வழங்கி தேர்ந்தெடுத்தார்கள். இந்த இரண்டு பதவிகளுக்கும் காங்கிரஸின் பெயரால் நிறுத்தப்பட்டவர்களின் வெற்றியைக் கண்டு உலக நாடுகள் அனைத்தும் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கின்றன. இவ்வாண்டில் நடைபெற்ற ஜனாதிபதி, உபஜனாதிபதி தேர்வில் வெற்றிகண்ட காங்கிரஸ் மகாசபையின் புகழ் உலகில் மேலும் பரவி நிலைத்து நிற்க இடமளித்திருக்கிறது. பாரதத்தின் புகழ் ஓர் படி வெளி நாட்டில் உயர்ந்திருப்பதையும் நாம் காணமுடிகிறது. இவர்கள் வெற்றியிலிருந்து இனி பாரத மக்கள் விழிப்புணர்ச்சியுடன் நாட்டின் முன்னேற்றத்தில் ஒத்துழைப்பை நல்குவார்கள் என்ற நம்பிக்கை அனைவருக்கும் இன்று ஏற்பட்டிருக்கிறது.

சிறுபான்மைச் சமூகத்தினரைச் சார்ந்த ஜாஹிர் ஹுசேன் அவர்கள் தேசியப்பற்றும் பரந்த மனப்பான்மையும் உடைய தியாக சீலர் என்பதும், மேலும் அவரும் ஒரு பாரதப் பிரஜைதான் என்பதும் உறுதி செய்யப்பட்டுவிட்டது இத்தேர்தலின் மூலம். பாரதநாட்டின் "மக்களாட்சி" நல்ல முறையில் நடைபெறும் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டுதான் ஜாகிர் ஹுசேன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. காங்கிரஸ் அல்லாத பிற கட்சிகளின் தலைவர்களில் பலர் அர்த்தமற்ற முறையில் நாட்டின் முன்னேற்றத்திற்கு இடையூறாக அறிக்கைகள் விடுவதும், சவால் விடுவதும் ஆருடம் கூறுவதும் போன்ற அநாகரீகப் போக்கைப்பற்றி மக்களில் பெரும்பாலோர் இன்று உணரத் தலைப்பட்டு விட்டார்கள். நாட்டின் பொருளாதார விடுதலைக்கான முன்னேற்றம் காண ஆர்வம் அவர்களிடம் உண்மையிலேயே இருக்குமாயின் அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களையும் திட்டங்களையும் பயனுள்ளவைகளாக இருப்பின் மக்கள் வரவேற்பார்கள். பதவி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எல்லாம் தெரிந்த மேதைகளாக தங்களைக் கருதிக்கொண்டு மத்திய ஆட்சியை மிரட்டுவதை ஒரு கலையாகக்கொண்டு அறிக்கைகள் விடுவதும், பொது மக்களிடையே விஷமப்பிரசாரம் செய்வதும் அவர்களது செயலாக இருந்தால் பொதுமக்கள் இனி சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

மாநில ஆட்சிகளில் அமர்ந்துள்ள அமைச்சர்களும் மக்களின் வெறுப்புக்கு ஆளாகாமல் ஆட்சி நடத்திச் செல்ல வேண்டும். மக்களின் வெறுப்புகளுக்கு ஆளாக நேரிடும் எந்த மாநில ஆட்சியையும் மாற்றி அமைக்கும் உரிமை மக்களிடம் இருப்பதை அவர்கள் நினைவில் கொண்டு ஆட்சியை நல்ல முறையில் நடத்த முயற்சிக்க வேண்டும்.

பாரத நாடு பல மாநிலங்களைக்கொண்ட ஒரு நாடு. பல மாநிலங்கள் இருப்பினும், அவைகளை ஒன்றுபடுத்தி பாரத மக்கள் அனைவருக்கும் ஒரேவிதமான சமுதாய முன்னேற்றம் அளிக்கத்தான் மத்திய ஆட்சி என்ற ஒன்று நடைபெறுகிறது. மத்திய ஆட்சி யென்பது ஒன்று இல்லாமல் போனால் பாரதம் சிதறுண்டு உள்நாட்டுப் பூசல் வளர்ந்து வெளி நாட்டார் ஆளுகைக்கு பாரதநாடே போய்விடக் கூடும் என்பதை பலதலைவர் மறந்துவிட்டார்களோ? என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களில் பலர் பொறுப்பற்ற முறையில் பேசுவதைப் போன்று பல மாநில அமைச்சர்களும் இன்று பேசத்தலைப்பட்டு விட்டார்கள். அமைச்சர்கள் தாங்கள் எவ்வாறு இப்பதவியில் அமர்த்தப்

பட்டிருக்கிறோம் என்பதை மறந்துதான் பேசுகிறார்கள் என்றுதான் நினைக்கவேண்டி இருக்கிறது. அமைச்சர்களாகிவிட்டால் எதுவும் பேசலாம் எப்படியும் நடக்கலாம் என்பது ஜனநாயக நாட்டில் நடவாது என்பதை அவர் உணர வேண்டும். அடக்கமும், செயலாற்றும் திறமையும் அவர்களிடம் இல்லாமற் போயின் எவ்வளவு பெரிய மேதையாக இருந்தாலும் ஒரு நொடியில் அப்பதவியிலிருந்து பொது மக்களால் இறக்கப்பட்டு விடுவார்கள் என்பதும் உறுதி.

“அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்”

என்ற வள்ளுவன் வாக்கு ஒருநாளும் பொய்ப்பிக்காது என்பதை மட்டும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம். நாடு முன்னேற பொருளாதார விடுதலை பெற மக்கள் நல்வாழ்வு வாழ பாரத மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்த தேசீய ஒருமைப்பாட்டை வளர்க்க மாநில ஆட்சியினர் அனைவரும் முயற்சிக்க வேண்டுமென எழுத்தாளன் வேண்டிக் கொள்கிறான்.

டி. எல். பஞ்சாபகேசன்.

# எது சினிமா? எது நாடகம்?

–[வி. கோதுலேவ்]–

மாக்ஸிம் கார்க்கியின் “பிலிஸ்டைன்கள்” என்ற நாடகம் முதன் முதலாக அரங்கேற விருந்த சமயம் பிரதம டைரக்டரின் அறையில், நடிகர்கள் பேச்சை முடித்துக் கொண்டிருந்த வேளை நான் மக்கள் கலைஞரும், லெனின் விருது பெற்றவருமான ஜியார்ஜி தாவ்ஸ்தனகோவைச் சந்திக்கச் சென்றேன். அவர்தான் அந்த நாடகத்தின் பிரதம டைரக்டர் அவர் நாடகக்கலையின் நல்லாசிரியர்; தத்துவ அறிஞர்; எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு சிறந்த டைரக்டர். லெனின் கிராடிலுள்ள மாக்ஸிம் கார்க்கி போல்ஷாய் நாடக மன்றம் அவரால் தான் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. நாங்கள் பேசத் தொடங்கியவுடன் தாவ்ஸ்தனகோவ் கூறியது இதுதான்:

“தயவு செய்து, இன்று அரங்கேற விருக்கும் நாடகத்தைப் பற்றி ஒன்றும் கேட்க வேண்டாம். முதன் முதலாக ஒரு நாடகம் அரங்கேறும்போது, அதைப் பற்றிப் பேசுவது அபசகுனம். பத்துப் பதினைந்து முறை ஒரு நாடகம் அரங்கேறிய பிறகு, அதைப் பற்றி விவாதிக்கலாம் ஒவ்வொரு நாடகமும் ரசிகர்களாலேயே மெருகிடப் படுகிறது. அவர்கள் தான் மெய்யாகவே அதை உருவாக்குகிறார்கள். நாடகம் என்பது சினிமாவைப் போன்றதல்ல; சினிமாவில் படத்தை எடுத்து முடித்து விட்டால், அவ்வளவு தான்! அதை மெருகிட முடியாது.”

## முக்கிய வேற்றுமை

மேற்கண்ட ஒரே வாக்கியத்தில் அவர் சினிமாவுக்கும் நாடகத்திற்கும் உள்ள முக்கிய வேற்றுமையைக் கூறி விட்டார். எனினும் நான் இவ்விரண்டு கலைகளின் பரஸ்பர சேவாக்கைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பினேன். ஏனெனில் இன்று எந்தக் கலையும் தனித்து வளரவில்லை. இசை, இலக்கியம், நாடகம், சினிமா ஆகிய கலைகள் ஒன்றையொன்று பாதிக்கவும், செழுமைப்படுத்தவும் செய்கின்றன.

“நாடகம், சினிமா ஆகியவற்றின் பரஸ்பர பாதிப்பு குறித்து என்கருத்தை அறிய விரும்புகிறீர்கள் அல்லவா? சொல்லுகிறேன்; சினிமாவானது சிந்தனைகளை ஒருங்கே திரட்டும் கலையென்றும், நாடகம் அதைப் பின்பற்ற வேண்டுமென்றும் சிலர் கூறுகிறார்கள் நான் அதைப் பின்பற்ற வேண்டுமென்றும் சிலர் கூறுகிறார்கள். நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை. ஏனெனில் இன்றைய சிந்தனைகளை ஒன்றுதிரட்டி வெளியிடும் திறன், இன்று எல்லாக் கலைகளுக்கும் இருக்கின்றன.”

அவர் சிறு சிறு வாக்கியங்களில் பேசினார். அவரது சொற்கள், ஆழ்ந்த அனுபவத்தைப் புலப்படுத்தின. “பன்முகத் தன்மை என்பது சினிமாவின் விசேடப் பண்பல்ல இலக்கியத்திடம் சினிமா கடன் வாங்கிய பண்புதான் அது! ஆனால், நாடகத்துறையினராகிய எங்களுக்குச் சினிமா அனுபவம் தேவைதான். இலக்கியம், சினிமா ஆகியவற்றால் நாடகத்தில் முப்பரிமாணத்தன்மை உண்டாகிறது; முக்கியமாக முப்பரிமானச் சிந்தனை வளர்கிறது; இது ஓர் புதிய அம்சமாகும்; இன்றைய நாடகம் இப்புதுமையை இரு கை நீட்டி வரவேற்கிறது ...”

## முக்கிய பிரச்னை

“இன்றைய சினிமாவின் முக்கிய பிரச்னை என்ன?”

“சிறந்த திரைக்கதையும், திறமையான நடிகர்களும் இல்லாமை!

எனவே தான். தலையாய நாடக நடிகர்களையெல்லாம், சினிமா டைரக்டர்கள் கூப்பிடுகிறார்கள் என் நடிகர்கள் சினிமாவில் சேர விரும்பினால், அவர்களுக்குத் தாராளமாக அனுமதி கொடுப்பேன். கிரில்லாவ்ரோவ், யெபிம் கோபல்யான், செர்கி யூர்ஸ்கி ஆகிய எனது நடிகர்கள் சினிமாவிலும் நடிக்கிறார்கள். அவர்கள் மீண்டும் நாடகத்தில் தோன்றும் போது, சினிமாவில் இயற்கை நடிப்பையும், யதார்த்த பாவத்தையும் கொண்டு வருகிறார்கள். இதனால் எங்களுக்கு மிகுந்த நன்மையே.

ஏனைய நாடக டைரக்டர்களைப் போலன்றி, ஜியார்ஜி தாவ்ஸ்தனகோவ், தமது கலைஞர்களைச் சினிமாத் துறைக்கு மனப்பூர்வமாக அனுப்புகிறார்; அத்துடன் தமது சினிமா அனுபவத்தை அவர்கள் நாடக மேடையிலும் பயன்படுத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறார்; இதுதான் அவரது நாடக மன்றத்தின் சிறப்பியல்பாகும்.

இவரது நாடகங்களில் கருத்துச் செறிவு அதிகம்; அவை நம் சிந்தனையை ஆழமாகக் கிளறும். இன்றைய நாடகக் கலையில் சிந்தனைக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும் என்பது, எந்த அம்சத்திலும் மேலோட்டமான போக்கு இருக்கக் கூடாது என்பதும் இவரது கொள்கையாகும்.

## இன்றைய நடிகர்கள்

“இன்றைய நடிகர்களைப் பற்றி
உங்கள் கருத்து என்ன?”

“ஒருவர் வெறும் நடிகராக மட்டுமல்லாது, தான் நடிக்கும் நாடகம் அல்லது சினிமாவின் ஆசிரியருக்குப் போட்டியாகவும் வேண்டும்; அவற்றில் புதிய அம்சங்களைச் சேர்த்து மெருகிட வேண்டும் தனித்தன்மையுள்ள நடிகராக இருந்தால், அப்படைப்பும் சுவையாக இருக்கும்.”

‘நாடகத்திலும், சினிமாவிலும் உங்களுக்குப் பிடிக்காதது எது?’

“மந்தமான கலை, இலக்கியம் எதுவும் எனக்குப் பிடிக்காது. அவை மட்டரகத்தை விட மோசமானவை! ஒரு சிறந்த கருத்தை மந்தமாகவும், தனித்தன்மையில்லாமலும் அரங்கேற்றினால், என்னால் பொறுக்க முடியாது. இன்றைய யுகத்தின் சாராம்சத்தைச் சித்திரிக்கும் கலைக்குத்தான் நீடித்து வாழ உரிமையுண்டு இன்றைய கலைகள் நம்மைச் சுற்றியுள்ள நிகழ்ச்சிகளை வெறுமனே பிரதிபலித்தால் போதாது: இன்றைய உலகப் போக்குகளையும் விளக்க வேண்டும்.”

“அப்படியானால் கலை, பிரசாரம் ஆகிவிடாதா? அதன் உயிரோட்டம் நின்று விடாதா?”

“உண்மைக் கலையென்பது, பிரசாரத்தன்மை கொண்டதுதான்; ஆனால், செய்தித்தாள் பிரசாரமல்ல! இன்றைய போக்குகளை, மிகுந்த கலை அழகுடன் வெளியிடும் மேடையே பரசாரம் என்பேன்.”

# சினிமாவும் எழுத்தாளனும்

—[சிங்கிஸ் அய்த்மதோவ்]—

★

சினிமா இல்லாமல், இன்றைய வாழ்க்கை இல்லை. அது நமது கலாசார வாழ்வின் இணைபிரியா அம்சமாகவும், நமது சிந்தனையின் ஒரு பகுதியாகவும் ஆகிவிட்டது. நான் சிறுவனாக இருக்கும் போதே சினிமாவில் ஆசை கொண்டேன்; பின்னர் எழுத்தாளனானபோது, சினிமாக்கலையின் வளர்ச்சியைக் கவனித்து வந்தேன்; அதன் மாபெரும் ஆற்றலைக் குறித்து அடிக்கடி சிந்தித்திருக்கிறேன்.

கிர்கீஸியாவில் ஒரு ஸ்டுடியோ திறக்கப்பட்ட பொழுது தான், சினிமாவுக்கும் எனக்கும் நேரடித் தொடர்பு ஏற்பட்டது. டைரக்டர் அலெக்ஸிசகாரோவுடன் சேர்ந்து, 'சிவப்புக் கைக்குட்டையில் அழகிய பாப்லார்' என்ற எனது கதையைத் திரைக் கதையாக எழுதினேன். அது எனக்குப் பிடித்திருந்தது. திரைக் கதை எழுதும் நுட்பங்களைக் கற்றேன்; அவை எவ்வாறு திரையிலே மிளிருகின்றன என்பதையும் கண்டேன். நான் திரைக்கதை எழுதிய படம் வெற்றி பெறுமா என்ற சந்தேகமும், பயமும் என்னை வாட்டின; ஆனால், "மலைக் கணவாய்" என்ற அப்படம் வெற்றி பெற்று விட்டது.

"ஒட்டகத்தின் கண்" என்ற எனது கதையைத் தழுவி, "வெப்பம்" என்ற படத்திற்குத் திரைக்கதை அமைத்தேன். அதன் படப்பிடிப்பில் நான் கலந்துகொள்ளவில்லை; ஆனால் இளம் டைரக்டரான லாரிஸா ஷெபித்கோவின் பணியைக் கவனித்து வந்தேன்.

## கருத்து ஒற்றுமை:

"வெப்பம்" என்ற படமும் வெற்றி பெற்றது. அதன் வெற்றிக்குக் காரணமென்ன? டைரக்டருக்கும் எனக்குமிடையேயுள்ள கருத்து ஒற்றுமை தான்; எங்களது வாழ்க்கை அனுபவத்தால் நாங்கள் ஒரே முடிவுக்கு வந்தோம். ஒரு அநுபவமானது. இரு மனிதர்களிடம் வெவ்வேறு உணர்ச்சிகளை உண்டாக்கலாம்; ஆனால் அவர்கள் கலைத்துறையில் ஒருங்கே பணியாற்ற வேண்டுமெனில், அவர்களது கலை மதிப்பீடு ஒன்றாகவே இருக்க வேண்டும்.

"வெப்பம்" என்ற படத்தில், என் நாவலில் இல்லாத காட்சிகள் உள்ளன; கதை அம்சத்திலும் சில மாற்றங்கள் உள்ளன; ஆனால் அடிப்படைத் தேவையான கதையின் ஆன்மா பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஒரு நாவலைத் திரைக்கு ஏற்றவாறு அமைக்க வேண்டுமெனில், அதன் அடிப்படை அம்சத்தை டைரக்டர் உணர்ந்திருக்க வேண்டும்; அதைத் திரையிலே சித்திரிக்கும் ஆற்றலையும் அவர் பெற்றிருக்க வேண்டும்.

சினிமாக்கலையின் வளர்ச்சியும், இலக்கியத்திலே சினிமாவின் செல்வாக்கும் ஒன்றையொன்று சார்ந்தவையாகும். நுண்மையாகவும், ஆழமாகவும் சிக்கலான முறையிலும் மனிதப் போக்குகளை ஆராய்வது இலக்கியத்தின் பணியாக இருந்து வந்தது; இன்று சினிமாவும் இதில் பங்கெடுத்துக் கொள்கிறது. இலக்கியம் மாறாகச் சினிமாவிடமிருந்து புதிய வடிவங்களையும், புதிய லயங்களையும் உயரிய காட்சி வெளியீடுகளையும் இலக்கியம் பெற்றுள்ளது.

## மூல வளம்:

இலக்கியம் என்பது சினிமாவின் மூலவளமாகும். இதிலிருந்து படத் தயாரிப்பாளன் தனக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொள்கிறான்; கோடிக்கணக்கான மக்கள் ரசிக்கும் கலையாக்குகிறான். இன்று எந்த டைரக்டரும், யந்திரம்போல் ஒரு நாவலையோ கதையையோ படமாக்க இயலாது; அதற்கு முற்றிலும் வேறொரு கலையுருவம் தரவே அவர் விரும்புவார். ஒரு நாவல் அல்லது கதையின் நிகழ்ச்சிகளையும், பாத்திரங்களையும், டைரக்டர் சிருஷ்டிக் கண்ணோட்டத்துடன் அணுக வேண்டும். அவ்வாறானால் தான் முற்றிலும் புதிய கலைப்படைப்பு உருவாகும்.

சினிமாத் துறையிலே ஈடுபடும் எழுத்தாளன், தனது படைப்புகளைப் புது நோக்குடன் பார்க்க வேண்டும். நான் எழுத உட்காரும்போது எனது வாசகர்கள் மட்டுமின்றி, திரைப்பட ரஸிகர்களும் என் மனக்கண் முன் வருகின்றனர். எனவே, நான் ஒரே சமயத்தில் இருவித அலுவல்களில் ஈடுபடுகிறேன் "தளம் நடையோனின் சாவு" என்ற நாவலை எழுதுகையில், திரைப்பட அநுபவம் எனக்கு உதவியது. திரைப்பட அனுபவம் பெற்ற நான் இந்நாவலில் புதிய நிகழ்ச்சிகளையும், நுணுக்கங்களையும் புகுத்தியுள்ளேன்; எனது பாத்திரங்களைப் புதுமுறையில் சித்திரித்துள்ளேன்.

இன்றைய திரைப்படத் தயாரிப்பாளர்கள் மனித குணங்களை ஆழமாக ஆராய்கின்றனர்; தமது கதாநாயகர்களின் அகவாழ்க்கையில் மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றனர்.

இச்சமயத்தில் தேசிய சினிமாக்கலையைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வேண்டும்.

## தேசியச் செல்வாக்கு:

ஒவ்வொரு உண்மையான கலையும், ஒரு தேசிய இனத்தின் பண்புகளை உண்மையாகப் பிரதிபலிக்கிறது. தேசிய வாழ்வின் வடிவங்கள் மாறுகின்றன என்பதையும், பல்வேறு தேசிய இனங்கள் ஒன்றையொன்று செழுமைப் படுத்திக் கொள்கின்றன என்பதையும், காலப்போக்கில் பழைய மரபுகள் அழிந்து புதியமரபுகள் தோன்றுகின்றன என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனினும் சில ஆசிரியர்கள் உள்ளூர்ப் பண்புகளையும், விசித்திரங்களையும் மிகச் சிரமத்துடன் வருணித்துக் கொண்டிருக்கிறார்கள். அவை போலியானவை என்பதையும், காலம் கடந்தவை என்பதையும் அவர்கள் உணரவில்லை என்பது வருந்தத் தக்கது.

ஒவ்வொரு தேசிய பிலிம் ஸ்டுடியோவும் தனது மக்களின் வரலாற்றிலுள்ள முக்கியமானதும், முற்போக்கானதுமான அம்சங்களைப் பற்றியே பேசவேண்டும் என்று நான் தெளிவாக உணர்கிறேன். மாபெரும் கலைகள் என்பவை, மாபெரும் பிரச்னைகளை நாடியுள்ளன; மனிதாபிமான கருத்துக்களைப் பரப்பியுள்ளன. அனைத்து மக்களும் ஒரு கலைஞனைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், அவன் தனது மக்களின் ஆசைகளையும், நம்பிக்கைகளையும் நுட்பமாகப் பிரதிபலிக்க வேண்டும்.

உதாரணமாக, "போர் வீரனின் தந்தை" என்ற ஜார்ஜியப் படத்தை எடுத்துக்கொள்வோம் இதில் ஒரு ஜார்ஜிய தந்தையின் பாத்திரத்தை ஸெகரியாத்ஸெ மிக ஆழமாகப் பிரதிபலிக்கிறார். "போர்வீரனின் தந்தை"யாக வரும் விவசாயி, ஜார்ஜியக் குடி

மகனாகவும், தாய் நாட்டின் பாதுகாவலனாகவும் விளங்குகிறார். வாழ்வு, காதல், சமாதானம் ஆகிய பிரச்னைகளை உணரும் எந்த மனிதனும், இந்த ஜார்ஜிய விவசாயியின் பாத்திரத்தை நன்கு புரிந்துகொள்ள முடியும்.

“மறைந்த மூதாதையரின் நிழல்கள்” என்ற உக்ரேனியப் படத்தை எடுத்துக்கொள்வோம். இப்படத்தில் உக்ரேனிய விவசாயிகளின் பழக்க வழக்கங்களையும், இசையையும் மிகச் சிறப்பாக அநுபவிக்கிறோம்.

கிர்கீஸிய சினிமாத் தொழில் இளம் பருவத்தில் உள்ளது எனினும், நாம் சிறந்த சாதனை புரிந்துள்ளோம் என்று பெருமைப்பட்டுக்கொள்ள இடமுண்டு.

---

மதிப்புரை

## செந்தமிழ்க் கனி

[எழுதியவர்: திரு. கோவிந்தன் —வெளியீடு: பத்மா பப்ளிகேஷன், 35, நசிரம்மபுரம், சென்னை-4—விற்பனை உரிமை: மல்லிகை பதிப்பகம், தியாகராயநகர், சென்னை-17—பக்கங்கள்: 172 விலை: ரூ. 3-00.]

“தமிழ் என்னும் கடலிலே இப்படிப்பட்ட முத்துக்கள் பல பல கோடி. ஒவ்வொரு முத்தையும் எடுத்து முத்தமிழாக எடுத்துரைத்தால் எத்தனை பெரிய விரிவுரையும் தரலாம். நமது மூதாதையர்கள் சின்னஞ்சிறு கவிதைகளிலே இலக்கியத்தையும், ஞானத்தையும், அறிவையும் அழகாக அமைத்துச் சென்றிருக்கிறார்கள். மாதுளம் பழத்திலே முத்துக்கள் மறைந்திருப்பது போல அரிய பொருள்கள் அடங்கியிருக்கின்றன. மேலே உள்ள தோலைக் கொஞ்சம் அகற்றினால் செந்நிறச் செந்தமிழ் முத்துக்கள் காட்சி அளிக்கும். அந்த மாட்சியை அரிய காட்சியைக் காணவாரும் செகத்தீரே என்று அறை கூவி அழைக்கிறது சாட்சியாக மேலுள்ள மணிவாசகத் தமிழ்.”

மேலே உள்ளது ‘செந்தமிழ்க் கனி’ நூலின் முதல் கட்டுரையான ‘மணிவாசகம்’ என்பதன் இறுதிப் பகுதியாகும். மணிவாசகப் பெருமானின், ‘பாலினைந் தூட்டும்’ எனத் தொடங்கும் அரிய பக்திப் பாடலுக்கு விளக்கமாக எழுந்ததே இக்கட்டுரையுமாகும்.

இவ்வாறு, ஒவ்வொரு புலவர்க்கும் ஒவ்வொரு பாடலாகத் தேர்ந்தெடுத்து, அவ்வப் பாடலைப் பழகு தமிழிலே அழகுற விளக்கு முகத்தான் சீரிய முறையிலே எழுதப் பெற்றுள்ள முப்பத்தொன்பது கட்டுரைகளைக் கொண்டு, பாங்குற அமைந்துள்ளதே இச் ‘செந்தமிழ்க் கனி’. தேனைச் சுவை நல்கும் ‘தெள்ளினிறச் சுளைகள் பல ஒருங்கே தன்னகத்தே கொண்டிலங்கும் மொரு மாப்பலாக் கனியாகும் இந்த நன்னூல்! திரு கோவிந்தனின் பரந்த தமிழ்க் கற்பக்கும் ஆழ்ந்த புலமைக்கும் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகத் திகழுமின் நூல் தமிழர்க்கு நல்விருந்தாகும் என்பதிலே ஐயமில்லை. ‘ஆசிரியர் மொழிக்குச் செய்துள்ள உறுதியான பணி இது’ என மொழிந்து உளமாரப் பாராட்டலாம்.

கவிஞர் ‘சோமு’ (திரு. மீ. ப. சோமசுந்தரம்) அவர்களின் அழகிய சிறு முன்னுரை ‘கனி’ நூலுக்கு அணி செய்கின்றது.

நவில்தொறும் நயம் பயக்கும் இத்தகைமை சால் செந்நூலை தமிழுணர்ச்சியுள்ளோர் படித்துத் துய்க்க வேண்டும்.

—“ஆனந்தகுமார்”

---

## தாய் தந்தையரே இல்லாத அனாதைச் சிறுவர்களுக்கு மட்டும் புகலிடம்

ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் தமிழ் நாட்டிலுள்ள தாய் தந்தை இருவருமே யற்ற ஏழை அனாதைச் சிறுவர்களுக்கென்றே ஏற்பட்டுள்ள தனிப்பெரும் தர்ம ஸ்தாபனம். அவர்களுக்காகவென்றே குருகுலமும் (ஹாஸ்டல்), வித்யாலயமும் (ஹைஸ்கூல் வரை), இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டும் (பம்ப் செட் உற்பத்தியும், பயிற்சியும்) ஏற்பட்டிருக்கின்றன. இதுசமயம் 300க்கு மேற்பட்ட சிறுவர்கள் இங்குப் புகலிடம் பெற்று இறையருளால் வாழ்ந்து வருகின்றனர்.

ஜாதி, மத இன, கட்சி பேதமின்றி மனித சமுதாயம் முழுமைக்கும் இங்கு புகலிடம் பெற உரிமையுண்டு. 8 வயது முதல் 14 வயது வரையுள்ள சிறுவர்களை மட்டுமே எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி, தொழிற் பயிற்சி ஆகியன யாவும் அவர்கள் ஆளாகும் வரை முற்றும் இலவசமாகவே வழங்கப்படுகிறது. ஸ்தாபனம் ஏற்பட்ட காலத்திலிருந்து இங்குச்சேர வந்த எந்த ஒரு சிறுவனுக்கும் எங்கள் விதிக்குப் பொருத்தமாயிருந்து “இடமில்லை” என்று இதுவரை மறுத்ததில்லை. இந்தத் தர்மஸ்தாபனத்தின் இலட்சியமே யாரும் ஆதரிப்பாரின்றி அவல நிலையில் திரியும் தாய் தந்தை இருவருமேயற்ற அனாதைச் சிறுவர்கள் தமிழ் நாட்டில் ‘யாருமே இனி இல்லை’ என்ற நிலையை ஏற்படுத்துவதுதான்.

ஆகையால் அனாதை மக்கள் சேவையில் ஆர்வமுள்ள யாவரும் அந்நிலையிலுள்ள அனாதைச் சிறுவர்களை இங்குச் சேர்த்துவிட கீழ்க்கண்ட விலாசத்திற்கு முதலில் விவரங்களுக்கு எழுதலாம்.

தலைவர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண குடில்,
திருப்பராய்த்துறை அஞ்சல்,
திருச்சி மாவட்டம்.

---

## நினைக்கின்ற பொழுதெல்லாம்

—[திருச்சி பாரதன்]—

நினைக்கின்ற பொழுதெல்லாம்
விரைந்தோடி வரவேண்டும்
நினைவினிலும் கனவினிலும்
நிறைந்தின்பம் தரவேண்டும்
வடிக்கின்ற கவியெல்லாம்
அமுதாகும் நிலைவேண்டும்
வளர்கின்ற திருநாட்டின்
வளமூட்டும் திறன்வேண்டும்.

அழைக்கின்ற வெறியாசை
அனல்பட்டு விழவேண்டும்
அனுதினமும் சிறுநாவில்
அழகுநட மிடவேண்டும்
பிழைக்கின்ற வழியறியா
பேதமைகள் அறவேண்டும்
புகழ்சிறக்கும் வயலூரா!
பணிவணக்கம் பெறவேண்டும்.

## திரு. கே. ஆர். கலியாணராம ஐயர் மணி விழா

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

கட்டிடத்திற்காக அறைகளும், உணவுக்கட்டிடம் ஒன்றும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ கலியாணராம ஐயரின் பணிகளையும், சேவை ஆர்வத்தையும், பாராட்டி மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பல்வேறு கட்சியினர்களும், பழம்பெரும் தேசபக்த தியாகிகளும் ஆசியுரைகள், பாராட்டுரைகள், வாழ்த்துப்பாக்கள், மாலைகள், பொன்னாடைகள் அணிவித்து மகிழ்ந்தனர்.

களத்தூர் நிலக்கிழார் திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் குமாரர் நரசிம்மனால் பட்டாடை ஒன்று கலியாணராம ஐயருக்கு போர்த்தப்பட்டது.

விழாவையொட்டி இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், முன்னாள் கவர்னர் ஜெனரல் சி. ராஜகோபாலாச்சாரியார், சென்னை கவர்னர் உஜ்ஜல்சிங், மைசூர் கவர்னர் வி. வி. கிரி, புதுச்சேரி கவர்னர் சீலம், பீஹார் கவர்னர் அனந்தசயனம் ஐயங்கார், லோக் சபை சபாநாயகர் என். சஞ்சீவி ரெட்டி, காங்கிரஸ் தலைவர் காமராஜ், முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலம் மற்றும் நூற்றுக்கணக்கான பேர் தேசம் பூராவிலிருந்தும் செய்திகளும், வாழ்த்துரைகளும், அன்பளிப்பும் அனுப்பியிருந்தனர்.

ராணிப்பேட்டை பாரி கம்பெனி சிப்பந்திகள் சங்கத்திற்கும் இராணிப்பேட்டை தொழிலாளர் சங்கத்திற்கும் கலியாணராம ஐயர் செய்த சேவைகளைப் பாராட்டி சிப்பந்திகள் சார்பில் பணமுடிப்பு ஒன்று அளிக்கப்பட்டது.

மணிவிழாக் குழுவின் செயலாளர் எ. சம்பத் நரசிம்மன் நன்றி கூறிய பினனர் பித்துக்குளி முருகதாஸின் பஜனை நடைபெற்றது. காலையில் கலியாண ராமஐயரின் இல்லத்தில் நடைபெற்ற வைதீக சஷ்டியப்த பூர்த்திவிழாவிற்கு ஏராளமான பேர் வந்திருந்தனர்.

ஹரிஜன சமூகத்திற்கும் நகர சுத்தி துப்புரவுத் தொழிலாளர்களின் க்ஷேமநலத்திற்கும் பாடுபடும் கலியாணராமனின் தொண்டுகளை பிரதிபலிக்கும் வகையில் ராணிப்பேட்டை நகரசபை தொழிலாளர்கள் அனைவருக்கும் சிற்றுண்டிகளை நகரசபைத் தலைவர் ஏ. சம்பத் நரசிம்மன், நகரசபைக் கமிஷனர் வி. கணபதி, கே. ஆர். கலியாண ராமஐயர் மற்ற நகரசபை உறுப்பினர்கள் நேரில் வழங்கினர்.

15 ஆண்டுகளாகத் திக்கற்ற குழந்தைகளைப் பராமரித்துவரும் தீனபந்து ஆசிரம வளர்ச்சிக்கு இந்த நேரத்தில் தங்களால் இயன்றதைப் பணமாகவோ, பொருளாகவோ கொடுத்து உதவுமாறு வேண்டுகிறோம்.

ரூ. ஆயிரம் அளித்து போஷகராகலாம், அல்லது ரூ. 500 அளித்து கௌரவ அங்கத்தினராகலாம், அல்லது ரூ. 100 அளித்து ஆயுள் உறுப்பினராகலாம், அல்லது ரூ. 60 நன்கொடை அளித்து உதவலாம்.

நன்கொடைகள், அன்பளிப்புகள் அனுப்புவோர் அன்புகூர்ந்து ஸ்ரீ W சோனுராவ், பொருளாளர், மணிவிழாக் குழு, தீனபந்து ஆசிரமம், வாலாஜாப்பேட்டை, P O. வடார்க்காடு என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டப்படுகிறது.

## மகாபாரத மொழிபெயர்ப்பாளர் மறைவு

பிரபல சோவியத் அறிஞரும், துருக்மீனிய விஞ்ஞானக் கழகத் தலைவருமான போரிஸ் ஸ்மிர்னேவ், தமது 75வது வயதில் அஷ்காபாத்தில் காலமானார். பேராசிரியர் ஸ்மிர்னேவ் இவ்விஞ்ஞானக் கழகத்தில் மருத்துவ விஞ்ஞானியாக ஐம்பது ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். மருத்துவத் துறையில் மட்டுமின்றி, மகாபாரதத்தின் ரஷ்ய மொழி பெயர்ப்பாளராகவும் அவர் பெரும் புகழ் பெற்றுள்ளார். அவர் மகாபாரதத்தின் 20,000 கண்ணிகளைச் சமஸ்கிருதத்திலிருந்து நேரடியாகவும், இலக்கிய நயத்தோடும் மொழி பெயர்த்துள்ளார். இவர் தமது மொழி பெயர்ப்புகளுக்கு எவ்வித ஊதியமும் பெற மறுத்து விட்டார். இந்திய—சோவியத் மக்களின் நட்புறவுக்குத் தமது மொழி பெயர்ப்பைக் காணிக்கையாக்கியுள்ளார்.


"எழுத்தாளன்"
(மாத இதழ்)
ஆண்டுமலர் உள்பட
வருட சந்தா ரூ 3—00
தனிப்பிரதி 25 பைசா
சிறப்பு மலர் தனி.
விபரங்களுக்கு: நிர்வாகி,
"எழுத்தாளன்"
24, தேரடிக்கடை தெரு,
திருச்சி-2.


## பாடும்பணியே அருள்வாய்

கவிஞர் இளங்கம்பன்

பல்லவி

பாடும்பணியே அருள்வாய்--உனையே
பாடும்பணியே அருள்வாய்............பாடும்

அநுபல்லவி

சாடும்வே லேந்திய சமராதிபனே
சண்முகனே என்று: சந்ததமும் தமிழில்... ...பாடும்

சரணம்

பச்சைமயிலழகை பாதச்சிலம்பழகை
பன்னிருகையழகை பால் வெண்ணீற்றழகை
கச்சையதன் அழகை காக்கின்ற வேலழகை
கனிந்து கனிந்துருகிக்கண்ணில் அருவிபாய... ... ..
பாடும்

# THE ART OF GOVERNMENT

—[ KODUMUDI RAJAGOPALAN] —

★

*( Continued from last issue )*

A Rightist Dictatorship is one in one in which the Government is under the thumb of a few big capitalists and guards their vested interestes. In opposition to this, a Leftist Dicatorship is one in which a few murderous persons delude the people into giving them the state power which they exercise arbitrarily In the former big business fattens itself and exploits the patriotic instincts of the majority of the population by directing national energies to imperrialist expansion In the latter, the people are fully employed, well paid, well fed and well clothed but they cannot think of those who govern them and criticise the ways of their rulers. Their thoughts and actions are controlled in the particular dire tion wanted by the holders of State power. They lead joyless lives. Such life in forced upon them. All directives on all walks of life emanate from the top-rank politicians. Monopolist capitalism will be absent only in name for those who wield state power are responsible to none and can lead a life of luxury in secret

Both these forces do not believe in democracy. They feel that the electivecprinciple in the Constitution of legislatures weakness the system of government which in turn, becomes incapable of the quick tempo which they think is needed for ushuring in their millenia. Those who want to reach their political by surprise and violent assaults on the constitution cannot be expected to devote their attention to the people's interests. So we must clearly understand that the greatest danger to the people in the twentieth century is the attempt of the extreme Rightist or Leftists to exploit the people to achieve their own petty party ends. Even the Fundamental Rights enjoyed by the citizen in a monarchy or oligarchy will be absent in any government of Rights or Leftists. Those who do not believe in the purity of aims and who would achieve what they want by means fair or foul whether Rightists or Leftists is competing to capture world power. Sometimes they will masquerade as democratic defenders of fundamental rights, of world peace and friendly foreign relations. An instance in support is the relationship between Stalin and Hitler in the Second World War – at first they embraced each other; then they stabbed each other. All these shows the opportunist politics they engage in. They are adepts in championing any cause in which their mischievous intents can have full play.

In opposition to these two dark forces, there is Democracy which ensures orderly progress by waking up the citizen to his duties and obligations, by establishing his good conduct, by ensuring that all citizens work in a co-operation for the entire social good. The yardstick of Democracy is that inequality, whatever its form, hampers social progress

It is true that in a Democracy, government is slow. But the fault lies not with the government but with the people. If the people act in unity and trust o democratic principles, then the machinery of government will follow suit. We must not be misled by or fall into the trab of those lovers of dictatorship who point their finger at this flaw of democracy and forget that despite this defect, Democracy ensures for us independence of thought, courageous expression of the same, capacity to change the government when it is inimical to the interests ofthe people. To be forewarned and fore-armed against these dark forces, we must create a tradition of integrity.

There are anarchists who pooh pooh all these as mere imagination Not for them any restriction on unbirdled individual action. It is to satisfy our human needs that government as a social institution is formed; We give government the power to formlate laws consistent with the need to make healthy progress in the political social and economic spheres. Having done that, we should not violate the very government which arises from our own actions.

Life has to be lived whether one views it as a play or a problem, joy or sorrow. Having been born in this world, we must live well and with a sense of social good. As Democracy is based on this wholesome principle, those who argue that it perpetuates the old ways are entirely wrong both in point and emphasis. New needs have to be met by changing old ways. This is an inevitable Law of nature. Those who claim to see things in a scientific manner refuse to accept the spritual nature of man. They describe science and spirit as separate from the root to the branch.

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2. Asst. Editor : T. L. Panchapakesan.